21st November 1963]

(b) Financial assistance is granted by the Government of India from the Union Home Minister's Discretionary Grant. The grant is recommended taking into account the period of imprisonment undergone by the Political Sufferer during the freedom struggle and his present financial position.

SRI M. S. SELVARAJAN : Are the Government aware that the disposal of applications for grant of financial aid to political sufferers is much delayed? If so, what is the reason for the same? Will any speedy action be taken in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may inform the hon. Member that there was no avoidable delay. If the application is received, it has to be verified whether the applicant comes under the category of political sufferer and whether he deserves any gratuity or aid.

**திரு. கரு. சீமைச்சாமி :** கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்கும் இந்தச் சலுகை உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்சி மாறிய அரசியல் தியாகிகளுக்குச் சலுகை கொடுப்பதற்குத் தடை ஒன்றுமில்லை இந்த விதிகளின்படி.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அரசியல் தியாகிகள் எல்லோருக்கும் நிலம் கொடுத்து உதவவேண்டும் என்பது தான் ஆரம்பத்தில் சர்க்கார் கொள்கையாக இருந்தது. பாதிப் பேர்களுக்கு நிலம் கொடுத்த பிறகு, ராஜாஜி மந்திரி சபையினுல் இது நிறுத்தப்பட்டு விட்டது. பாதிப் பேர்கள் உண்மையாகவே தியாகிகளாக இருக்கும் காரணத்தினுல், அவர்களுக்கு நிலம் கொடுப்பது பற்றி சர்க்கார் மறு பரிசிலனை செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 11 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்ட விஷயத்தை மீண்டும் எடுத்துக்கொள்வதாக இல்லை. அப்படி எடுத்துக்கொண்டாலும், கொடுப்பதற்கு நிலம் இல்லை.

### தேசீய பாதுகாப்பு நிதி

* 370 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9–30 a.m.

தேசீய பாதுகாப்பு நிதிக்கு தமிழ்நாடு அரசாங்க ஊழியர்கள் அவர்களது மாத சம்பளத்தில் ஒரு நாள் ஊதியத்தை அளித்துவிட வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டனரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir.

**திரு. முனு. ஆதி :** அப்படி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா? இப்பொழுதும் பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்து கொண்டிருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி ஒன்றும் புகார் வரவில்லை.